பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

29 12 2024 **SUNDAY** **7.15 PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஏழை எளியோரும் உரிய நேரத்தில் புற்றுநோய் சிகிச்சை பெற ஆயுஷ்மான் பாரத் திட்டம் பேரூதவியாக இருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. ராணுவ வீரர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவை நாட்டு மக்கள் அனைவருக்கும் ஊக்கம் அளித்து வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

3. விவசாயத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்கள் மூலம், மகசூல் அதிகரித்து விவசாயிகள் இரட்டிப்பு வருமானம் ஈட்டி வருவதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

4. இந்தியா – ஆஸ்திரேலியா இடையிலான பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக ஒப்பந்தம் பரஸ்பர வளர்ச்சிக்கு வித்திட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

5. சந்தோஷ் கோப்பை கால்பந்து போட்டியில், மேற்குவங்க அணி இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

*<u>-- இனி விரிவான செய்திகள் ---</u>*

**<<<<<>>>>>**

மத்திய அரசின் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின்கீழ், புற்றுநோயாளிகளுக்கு குறித்த காலத்தில் உரிய சிகிச்சைகள் வழங்கப்படுவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மக்களிடையே மனம் திறந்துபேசும் மன் கி பாத் நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், புற்றுநோய் சிகிச்சை தொடர்பான விழிப்புணர்வு மக்களிடையே பெருகியிருப்பதாக கூறினார்.

அந்நோய்க்கு எதிரான விழிப்புணர்வை மேலும் விரைவுப்படுத்த வேண்டும் என்று பிரதமர் நாட்டு மக்களை கேட்டுக்கொண்டார்.

<u>(வாய்ஸ் பைட் - பிரதமர் (1) – 63 செகண்ட்ஸ்)</u>

நமது அரசியலமைப்புச் சட்டமானது அனைவருக்கும் வழிகாட்டும் ஒளிவிளக்காக திகழ்வதாக திரு நரேந்திர மோடி கூறினார்.

பஸ்தர் ஒலிம்பிக் போட்டியானது சட்டீஸ்கரில் பல மாற்றங்களை ஏற்படுத்தும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் தங்களது வட்டாரத்தில் விளையாட்டுத்திறமைகளோடு விளங்குபவர்கள் முன்னேற உதவ வேண்டும் என்று பிரதமர் வலியுறுத்தினார்.

மக்களின் பங்களிப்புடன் மனதின் குரல் நிகழ்ச்சி உயிர்ப்புமிக்க ஆவணமாக மாறியிருப்பதாகவும், ஆக்கப்பூர்வமான சக்தியை ஒருங்கிணைப்பதாகவும் திரு நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

<u>(வாய்ஸ் பைட் - பிரதமர் (2) – 40 செகண்ட்ஸ்)</u>

நாட்டு மக்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவித்த பிரதமர், அனைவரும் உடல் உறுதியுடனும், மகிழ்ச்சியுடனும் வாழ வேண்டும் என்று வாழ்த்தினார்.

<u>(வாய்ஸ் பைட் - பிரதமர் (3) – 27 செகண்ட்ஸ்)</u>

பிரதமர் ஆற்றிய இந்த உரையின் முழு தமிழாக்கம் சென்னை அகில இந்திய வானொலியில் இன்று இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பு செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<<>>>>>

ராணுவ வீரர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவை நாட்டு மக்கள் அனைவருக்கும் ஊக்கம் அளிப்பதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம் இந்தூரில் மூன்று ராணுவ கல்வி நிறுவனங்களை பார்வையிட்ட அவர், **Meow** பகுதியில் ராணுவத்தினரோடு கலந்துரையாடினார்.

எல்லைப்பகுதியில் அவர்கள் ஆற்றிவரும் சேவையானது நாட்டு மக்களை பாதுகாப்பாகவும், வலுவாகவும் உணர வைக்கிறது என்று அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் வடக்கு மற்றும் மேற்கு பகுதிகளில் இருந்து பாதுகாப்பு சார்ந்த சவால்களை தொடர்ந்து எதிர்கொண்டு வருவதாகவும், அதை முறியடிக்கும் உத்வேகத்தோடு விழிப்புடன் இடையறாது செயல்பட வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

2047-ஆம் ஆண்டில் நாடு சுயசார்பு நிலையை எட்டுவதில், ராணுவத்தின் பங்கு மிக முக்கியமானது என்று திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

எல்லைகளை காப்பது மட்டுமல்லாமல், நாட்டை கட்டமைப்பதிலும் முன்னோடிகளாக ராணுவத்தினர் விளங்குவதாக அவர் கூறினார்.

இதைத்தொடர்ந்து, அப்பகுதியில் உள்ள பாபா சாஹேப் அம்பேத்கரின் திருவுருவச் சிலைக்கு திரு ராஜ்நாத் சிங் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

<<<<<>>>>>

விவசாயத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களை பயன்படுத்துவதன் மூலம், மகசூல் அதிகரிப்பதாகவும், அதனால் விவசாயிகள் இரட்டிப்பு வருமானம் ஈட்டி வருவதாகவும் அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

சூரிய மின்சக்தி சாதனங்களை வேளாண் துறையில் பயன்படுத்துவதன் காரணமாக இம்முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

திரிபுராவின் **Sepahijala** மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் மத்திய அரசின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்கள் குறித்து இன்று அவர் ஆய்வு மேற்கொண்டார்.

இரண்டு நாள் பயணமாக திரிபுரா சென்றுள்ள திரு பிரல்ஹாத் ஜோஷி, அம்மாநில முதலமைச்சர் திரு மாணிக் சஹாவுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

அப்போது, திரிபுராவில் செயல்படுத்தப்படும் மத்திய அரசின் திட்டங்கள் குறித்து அவர் கேட்டறிந்தார்.

மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ள தனியார் நிறுவன உத்தரவாதத் திட்டத்தின்கீழ், வடகிழக்கு மாநிலங்களில் தானிய சேகரிப்பு அதிகரித்துள்ளதாக திரு பிரல்ஹாத் ஜோஷி கூறினார்.

<<<<<>>>>>

இந்தியா – ஆஸ்திரேலியா இடையிலான பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக ஒப்பந்தம் வெற்றிகரமாக இரண்டு ஆண்டுகளை நிறைவு செய்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதன்மூலம், இருநாடுகளும் பரஸ்பர வளர்ச்சியை கண்டிருப்பதாகவும், சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான புதிய வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் மத்திய வர்த்தக அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜவுளி, ரசாயனம், வேளாண்மை துறைகளில் கணிசமான வளர்ச்சி ஏற்பட்டிருப்பதாகவும், மின்னணு மற்றும் பொறியியல் துறை வளர்ச்சிக்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளதாகவும் அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<<>>>>>

தென்கொரிய விமான விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 179-ஆக அதிகரித்துள்ளது.

விமான பணியாளர்கள் இருவர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

இதைத்தொடர்ந்து அந்நாட்டில் வரும் ஜனவரி நான்காம் தேதிவரை தேசிய துக்கம் அனுசரிக்கப்படும் என்று தற்காலிக அதிபர் திரு **Choi Sang Mok** தெரிவித்துள்ளார்.

அந்த விமானத்தில் இருந்து இரண்டு கருப்பு பெட்டிகளும் மீட்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

<<<<<>>>>>

உலக **Rapid** செஸ் சாம்பியன் போட்டியின் மகளிர் பிரிவில் பட்டம் வென்ற கோனேரு ஹம்பிக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், அவரது சாதனை வரலாற்று சிறப்புமிக்கது என்றும், செஸ் விளையாட்டில் ஈடுபடும் இளையோரை ஊக்குவிப்பதாக அமைந்துள்ளது என்றும் கூறியுள்ளார்.

மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், இந்த வெற்றியின் மூலம், கோனேரு ஹம்பி நாட்டுக்கு பெருமை சேர்த்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

சந்தோஷ் கோப்பை கால்பந்து போட்டியில், மேற்குவங்க அணி இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற அரையிறுதியில் அந்த அணி, 4-2 என்ற கோல் கணக்கில், சர்வீஸஸ் அணியை வென்றது.

மற்றொரு அரையிறுதியில் கேரளா மணிப்பூரை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

----------------

மெல்போர்னில் நடைபெற்று வரும் இந்தியாவுக்கு எதிரான நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் நான்காம் நாள் ஆட்டநேர இறுதியில், ஆஸ்திரேலியா இரண்டாவது இன்னிங்ஸில் 9 விக்கெட் இழப்புக்கு 228 ரன் எடுத்துள்ளது.

இதையடுத்து, அந்த அணி 333 ரன் முன்னிலை பெற்றுள்ளது.

இந்திய தரப்பில் இரண்டாவது இன்னிங்ஸில் பும்ரா 4 விக்கெட்டுகளையும், சிராஜ் 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்

ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 474 ரன் எடுத்தது. இந்தியாவின் முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 369.

----------

மாலத்தீவு உடனான சர்வதேச நட்புணர்வு கால்பந்து போட்டியில் பங்கேற்கும் இந்திய மகளிர் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அணியில் 23 வீராங்கனைகள் இடம்பெற்றிருப்பதாக பயிற்சியாளர் **Joakim Alexandersson** தெரிவித்துள்ளார்.

நாளை மற்றும் அடுத்த மாதம் 2-ஆம் தேதியன்று நடைபெறும் போட்டிகளில் இந்த அணி பங்கேற்கிறது.

இதனை இந்திய கால்பந்து யூ டியூப் சேனலில் நேரலையாக காணலாம்.

----------

புரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறும் இறுதியாட்டத்தில் ஹரியானா – பாட்னா அணியை எதிர்கொள்கிறது.

புனேயில் நடைபெறும் இப்போட்டி, இரவு எட்டு மணிக்கு தொடங்குகிறது.

------

ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் சூர்மா அணியை – தமிழக அணி எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு மணி 8.15க்கு தொடங்குகிறது.

மற்றொரு ஆட்டத்தில் ஹைதராபாத் - பெங்கால் அணிகள் மோதுகின்றன.

--------

ஐஎஸ்எல் கால்பந்துப் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் ஜாம்செட்பூர் – கேரள அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி, இரவு ஏழரை மணிக்கு தொடங்குகிறது.

<<<<<>>>>>